**நல்லூர் பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 27 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நல்லூர் பிரதேச சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசசபைகள் சட்டம் அத்தியாயம் III பிரிவு 24 | பிரதேச சபைகளின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ)இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் இலக்கம் 381(3) | காசோலைகளில் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் பிணை செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பொது நிர்வாக சுற்றுநிருபம் 11.06.1999 ஆம் திகதிய 14/99 ஆம் இலக்கம் | ஊழியர் கடன் பெற்ற கடனாளிகளினால் நேர்மையுடன் செய்யப்படும் பிரகடனம் இணைக்கப்படவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 64,903,029 விளைந்திருப்பதுடன் ஒப்பிடும்போது இதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 46,285,714 இருந்தமை நிதி விளைவு ரூபா 18,617,315 அதிகரித்துள்ளமைக்கு வருமான அதிகரிப்பே காரணமாகும்.

### 2.2 தொழிற்படு மூலதனம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 264,111,088 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 234,885,808 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 29,225,280 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 வருமான முகாமைத்துவம்

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2015 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** |
| வீதவரிகள் | 2,800 | 2,600 | 6,771 |
| குத்தகை வாடகைகள் | 27,657 | 20,992 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,362 | 5,162 | - |
| ஏனைய வருமானங்கள் | 93,962 | 102,274 | 165,310 |
| **மொத்தம்** | **126,781** | **131,028** | **172,081** |

### 2.3.2 வீதவரிகள்

செயலாளரினால் வீதவரி நிலுவை ரூபா 6,770,878 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் சபையின் எல்லையிலுள்ள ஆதனங்களுக்கு ஆதன மீள்மதிப்பீடு விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

### 2.3.3 குத்தகைகள் மற்றும் வாடகைகள்

அ. குத்தகை நிலுவை ரூபா 146,916 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆ. வாடகை நிலுவை ரூபா 974,123 சபையினால் அறவிடப்படாதுள்ளது.

### 2.3.4 முத்திரைக் கட்டணங்கள்

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 156,080,506 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

2015 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 05 வேலைகள் முற்றாக மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்டுள்ளது.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 199,349 தொடக்கம் ரூபா 4,109,078 வரையான வேறுபாடு காணப்பட்டுள்ளது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

சபையில் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை.

## 4.4 சொத்து முகாமைத்துவம்

-------------------------------------

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

-----------------------------------------------

கொள்வனவு செய்யப்பட்ட காணி 2 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றது.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------------

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ)வாடகைப் பதிவேடு
(ஆ) ஒப்பந்தப் பதிவேடு
(இ) காசோலைப் பதிவேடு
(ஈ) வாகன ஓட்ட அட்டவணை